பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் .எ.வ. வேலு சென்னை, சைதாப்பேட்டை,எம்.சி. இராஜா ஆண்கள் விடுதி வளாகத்தில் புதியதாக கட்டப்பட்டு வரும் ஆண்கள் விடுதியின் கட்டட கட்டுமானப் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.ஆய்வின்போது உயரதிகாரிகள் முத்தமிழரசு, விஜயானந்த், மாலதி மற்றும் பொறியாளர்கள் உடனிருந்தனர்.

சென்னை - சைதாப்பேட்டை எம்.சி. இராஜா ஆண்கள் விடுதி வளாகத்தில்

புதியதாகக் கட்டப்பட்டு வரும் விடுதிக் கட்டுமானப் பணிகள்!

அமைச்சர் எ.வ.வேலு நேரில் களஆய்வு மேற்கொண்டார்!

சென்னை, மார்ச் 30-

சென்னை, சைதாப் பேட்டை எம்.சி. இராஜா ஆண்கள் விடுதி வளாகத் தில், புதியதாக கட்டப் பட்டு வரும் விடுதிக் கட் டட கட்டுமானப் பணி களை, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு கள ஆய்வு மேற்கொண்டார்.

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, நேற்று (29.03.2025) சென்னை, சைதாப் பேட்டை, எம்.சி. இராஜா ஆண்கள் விடுதி வளாகத் தில், புதியதாக கட்டப் பட்டு வரும் விடுதி கட்டட கட்டுமானப் பணிகளை களஆய்வு மேற்கொண்டார்.

முதலமைச்சர் அவர்க ளின் ஆணைப்படி, சென்னை, சைதாப் பேட்டை, எம்.சி.இராஜா ஆண்கள் விடுதி வளாகத் தில், ரூ.44.50 கோடி மதிப் பீட்டில், 1 இலட்ச சதுர அடி பரப்பளவில், தரைத ளம் மற்றும் 10 தளங்களு டன்கூடிய புதிய ஆண்கள் விடுதிக் கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகி றது. இந்த விடுதியில் 484 மாணவர்கள் தங்கும் வகை யில், 121 அறைகள் கட்டப் பட்டு வருகிறது. மேலும், விடுதி வார்டன் அறை, சமையலறை, உணவருந்தும் அறை, பொருள் வைப்பறை கள், பன்னோக்கு அறை, நூலக அறை, உடற்பயிற்சி அறை உள்ளிட்ட அனைத்து வசதிகளுடன் கட்டப்பட்டு வருகிறது.

இப்பணியை பொதுப்ப ணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு களஆய்வு செய்து, கட்டு மான பணியை குறித்த காலத்திற்குள் முடித்து மாணவர்களின் பயன்பாட் டிற்கு கொண்டுவர பொறி யாளர்களுக்கு அறிவுரை கள் வழங்கினார்.

இந்த களஆய்வின் போது, பொதுப்பணித் துறை கண்காணிப்புப் பொறியாளர் முத்தமிழரசு, செயற்பொறியாளர்கள் விஜயாஆனந்த், திருமதி. மாலதி மற்றும் பொறியா ளர்கள் உடனிருந்தனர்.

முதல்வர் பிறந்த நாள் : டாக்டர் டி.அன்புச்செல்வன் நிகழ்ச்சி ஏற்பாடு! சி.கே.வி. தமிழ்ச்செல்வன் தலைமை!

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட மருத்துவர் அணி சார்பில் இலவச மருத்துவ முகாம்!

மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. துவக்கி வைக்கிறார்!

காஞ்சிபுரம், மார்ச், 30,

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. மருத் துவ அணி சார்பில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு இல வச மருத்துவ முகாம் இன்று (30.3.2025 ஞாயிற்றுக்கி ழமை) காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை மீனாட்சி திருமண மண்ட பம் வணிகர் வீதி காஞ்சிபு ரத்தில் நடைபெறுகின்றது.

காஞ்சிபுரம் லைஃப் கேர் மருத்துவமனை இயக்குன ரும்,மாவட்ட மருத்துவ அணி தலைவருமான டாக் டர் டி.அன்புச்செல்வன் ஏற்பாட்டில் இந் நிகழ்ச்சி நடைபெறுகின்றது.

இம் மருத்துவ முகாமில் ரூபாய் 8000 மதிப்புள்ள கல் லீரல் நோய்க்களைக் கண்ட றியும் சோதனை மற்றும் ரூபாய் 10 000 மதிப்புள்ள நுரையீரல் பரிசோதனை மற்றும் சர்க்கரை, இரத்தக் கொதிப்பு மற்றும் மருத்துவ ஆலோசனையும் வலுங்கப் படுகிறது.

இந் நிகழ்ச்சிக்கு மாநக ரச் செயலாளர் சி.கே.வி. தமிழ்ச்செல்வன் தலைமை வகிக்கிறார். இலவச மருத் துவ முகாமை மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ.துவக்கிவைக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் சிறுவே டல் க.செல்வம் எம்.பி. சி. வி.எம்.பி. எழிலரசன் எம். எல்.ஏ., மேயர் எம்.மகா லட்சுமி யுவராஜ், சன்பி ராண்ட் கே.ஆறுமுகம்,கே. திலகர் ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

இம் இலவச மருத்துவ முகாமில் பங்கேற்று பலன் அடையும் மாறு காஞ்சிபு ரம் தெற்கு மாவட்ட மருத் துவர் அணி கேட்டுக் கொண்டுள்ளது.

அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஏற்பாட்டில் திரைப்பட நடிகர் சூரி திறந்து வைக்கிறார்!

சைதை கிழக்கு பகுதியில் 4 இடங்களில் தினமும் 10,000லிட்டர் குடிநீர் விநியோகிக்கும் மையங்கள்!

பகுதி செயலாளர் இரா.துரைராஜ் எம்.சி. வேண்டுகோள்!

சென்னை, மார்ச் 30 -

கழக தலைவர் அவர்க ளின் திராவிட மாடல் ஆட்சி யில் சைதை தொகுதியில் தொடரும் சாதனைகளின் தொடர்ச்சியாக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சரும் சென்னை தெற்கு மாவட்ட செயலாள ருமான மா.சுப்பிரமணியன் சீரிய ஏற்பாட்டில் சைதை தொகுதி மக்களின் கோடை வெப்பத்தை தணிக்கும் வகை யில் தினமும் 24மணிநேரமும் 10,000 லிட்டர் குளிர்ந்த குடி நீர் விநியோகிக்கும் மையங் களை இன்று 30.03.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணியளவில் சைதை கிழக்கு பகுதியில் உள்ள கீழ்க் காணும் 168வது வார்டில் ஜவ கர்லால் நேரு சாலை அம் பாள் நகர் ஈக்காட்டுத் தாங்கல் பேருந்து நிலையம் அருகிலும் 169வது வார்டில் சைதாப்பேட்டை அண்ணா சாலை மெட்ரோ ரயில் நிலை யம் அருகிலும்

170வது வார்டில் பொன் னியம்மன் கோயில் தெரு கோட்டூர் மார்கெட் அருகி லும் 172வது வார்டில் வேளச் சேரி மெயின் ரோடு ஐந்து பர்லாங் சாலை சந்திப்பு செக்போஸ்ட் பேருந்து நிலை யம் அருகிலும் உள்ள நான்கு இடங்களில் குளிர்ந்த குடிநீர் விநியோகிக்கும் மையங் களை திரைப்பட நடிகர் சூரி அவர்கள் சைதை தொகுதி வாழ் பொதுமக்களின் பயன் பாட்டிற்கு திறந்து வைக்கிறார்.

எனவே நிகழ்ச்சியில் சைதை கிழக்கு பகுதியில் உள்ள தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள் மாவட்ட கழக நிர்வாகிகள் மாமன்ற உறுப்பினர்கள் பகுதி கழக நிர்வாகிகள் வட்ட கழக செயலாளர்கள் மாவட்ட பிரதிநிதிகள் மாவட்ட மற்றும் பகுதி அணி களின் நிர்வாகிகள் வட்ட கழக நிர்வாகிகள் மூத்த முன்னோடிகள் சார்பு மன்ற நிர்வாகிகள் பாக முகவர்கள் மற்றும் பாக பணியாளர்கள் கழக தோழர்கள் பெரும் திர ளாக கலந்து கொண்டு சிறப் பிக்க வேண்டும் என சைதை கிழக்கு பகுதி செயலாளரும் 13வது மண்டல வார்டு குழு தலைவருமான இரா.துரை ராஜ் எம்.சி கேட்டுக் கொண் டுள்ளார்.

சோழவரம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில்

ஒன்றிய அரசை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

மாதவரம் எஸ்.சுதர்சனம் தலைமை! மீ.வே.கர்ணாகரன் முன்னிலை!

சென்னை, மார்ச் 30

சென்னை வடகிழக்கு மாவட்டம், சோழவரம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார் பாக கழக தலைவரும் தமி ழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி மாவட்ட கழக செயலாளரும் மாதவ ரம் சட்டமன்ற உறுப்பினரு மான மாதவரம் எஸ்.சுதர்ச னம் தலைமையில் மார்ச் 29 அன்று 100 நாள் (நூறு நாள்) வேலைவாய்ப்பு திட் டத்திற்கு நிதி வழங்காத மத் திய (மோடி) அரசை கண் டித்து பாடியநல்லூர் ஊராட்சியில் மொண்டியம் மன நகர் மார்கெட் அருகில் மற்றும் காரணோடை ஊராட்சியில் கார ணோடை பஜார் அருகில் ஆகிய இரண்டு இடங்களில் மாபெரும் கண்டன ஆர்ப் பாட்டம் சோழவரம் தெற்கு ஒன்றிய செயலாளர் மீ.வே.கர்ணாகரன் முன்னி லையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் சோழவ ரம் தெற்கு ஒன்றிய, மாவட்ட நிர்வாகிகள், மக ளிர் ஒன்றிய அணிகளின் துணை அமைப்பாளர்கள், மகளிர் பொதுமக்கள் மற் றும் 100 நாள் வேலை வாய்ப்பில் பணிபுரியும் மக ளிர்கள் உள்ளிட்ட ஏராள மானோர் கலந்து கொண்ட னர்.

100 நாள் வேலை உறுதித் திட்டத்திற்கு நிதி வழங்காமல் தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் ஒன்றிய அரசை கண்டித்து தருமபுரி கிழக்கு மாவட்டம் நல்லம்பள்ளி கிழக்கு ஒன்றியத்தில் தருமபுரி கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் – நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர்.ஆ.மணி தலைமையில் நல்லம்பள்ளி கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் ஏ.எஸ். சண்முகம் ஏற்பாட்டில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நல்லம்பள்ளி பேருந்து நிலையம் அருகில் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் சுற்றுச்சூழல் அணி மாவட்ட அமைப்பாளர் இளைய சங்கர் ,தகவல் தொழில் நுட்ப அணி மாவட்ட அமைப்பாளர் கௌதம்,மகளிர் அணி மாவட்ட அமைப்பாளர் முத்துலட்சுமி, மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் பத்மா ஒன்றிய நிர்வாகிகள்,முன்னாள் நகர் செயலாளர் சிட்டி முருகேசன்,சார்பு அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.

குதிரையாறு அணை ஆற்றில் ரூ.3.25 கோடியில் தரைப்பாலம் அமைக்கப்படும்!

பச்சையாறு அணை கட்டுவதில் கழக அரசின் தொடர் முயற்சி!

சட்டப் பேரவையில் - அமைச்சர் துரைமுருகன் விளக்கம்!

சென்னை, மார்ச். 30-

சட்டப் பேரவையில் நேற்று முன்தினம், பழனி தொகுதி கழக சட்டமன்ற உறுப்பினர் ஐ.பி.செந் தில்குமார் எழுப்பிய வினாக்க ளுக்குப் பதிலளித்த நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர் கள், பச்சையாறு அணை கட்டுவ தில் கழக அரசு நீண்ட காலமாக மேற்கொண்டு வரும் முயற்சிகள் குறித்து விரிவான விளக்க மளித்தார்.

கேள்வி நேரத்தில் இதுகு றித்து நடைபெற்ற விவாதம் வருமாறு:-

ஐ.பி.செந்தில் குமார்: பழனி தொகுதி, பழனி ஊராட்சி ஒன்றிம், ஆண்டிபட்டி ஊராட்சி, LS 300வது மீட்ட ரில் குதிரையாற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

அமைச்சர் துரைமுருகன்: திண்டுக்கல் மாவட்டம், பழனி ஊராட்சி ஒன்றிம், ஆண்டிப்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள குதிரையாறு அணை ஆற்றில் LS300வது மீட்டரில் தரைப்பாலம் அமைக்கும் பணி ரூ.3.25 கோடி மதிப்பீட்டில் மேற் கொள்ளப்படும் என்று இந் தாண்டு மானியக் கோரிக் கையில் அறிவித்திருக்கி றேன். அதற்கு விரைவில் ஒப்புதல் அளித்து பணி துவங்கப்படும்.

ஐ.பி. செந்தில் குமார்: இந் தாண்டு நீர்வளத் துறையினு டைய மானியக் கோரிக்கை யில் 8வது அறிவிப்பில், கிட்டத்தட்ட 3 கோடி 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட் டில் அந்தப் பாலம் அமைக் கப்படுமென்று அறிவித்தி ருக்கிற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மதிப்பிற்குரிய நீர்வளத் துறை அமைச்சர் அவர்க ளுக்கும் எனது தொகுதி மக் களின் சார்பில் முதலில் நன் றியைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

அதேபோல, பழனி வட் டத்தில் அமைந்துள்ள வரட் டாற்றின் குறுக்கே அமைந் துள்ள உப்புசட்டி அணைக் கட்டு என்பது பழமையான ஓர் அணைக்கட்டு. அந்த அணைக்கட்டு இப்போது சிதலமடைந்திருக்கிறது. அதையும் புனரமைத்துத் தர அமைச்சர் அவர்களை வேண்டுகிறேன். பழனி வட் டம், பாலசமுத்திரம் கிரா மம், குறும்பப்பட்டி அரு கில் பாலாற்றின் குறுக்கே தரைப் பாலம் அமைத்து, விவசாயிகளுடைய வாழ்வு களை காத்திட வேண்டும்.

அமைச்சர் துரைமுருகன்: ஒன்று வாங்கினால் இன் னொன்று இலவசம் என்று வியாபாரத்தில் சிலர் சொல் வார்கள். அதுபோல, இப் போதுதான் ஒரு திட்டத் தைக் கொடுத்திருக்கிறேன். அதற்கு நன்றி சொல்லி விட்டு, அடுத்த திட்டத் தைப்பற்றி கேட்கிறார். அதுவும் நிதிநிலைக்கேற்ப செய்து தரப்படும்.

ஐ.பி.செந்தில்குமார்: 1985 லிருந்து 2024 வரை கிட்டத் தட்ட 39 ஆண்டுகளாக 1,800க்கும் மேற்பட்ட ஏக் கர் நிலங்கள் பயன்பெறக்கூ டிய காவலப்பட்டி பகுதி யில் பச்சையாறு அணை அமைக்கப்பட வேண்டு மென்று நானும் ஒன்ப தாண்டுக் காலமாக இந்த அவையிலே தொடர்ந்து கேட்டுக்கொண்டிருக் கிறேன்.

அந்த அணை கட்டுவது குறித்த ஆய்வுகள் பலமுறை நடத்தப்பட்டு, தொழில் நுட்பக் காரணங்களால் அதை எடுத்துச் செய்வதில் சிரமங்கள் இருப்பதாக அறிக்கைகள் தெரிவிக்கின் றன. எல்லார்க்கும் எல்லாம் என்கிற சமூகப் பொருளா தாரம் மற்றும் ஒருங்கி ணைந்த அனைவருக்கு மான வளர்ச்சி என்கிற நிலைப்பாட்டில் மிக உறுதி யாக பயணிக்கிற நம்மு டைய திராவிட மாடல், மக்கள் தலைவர் அரசு பொருளாதார பயனீட்டு அளவுகளை விளக்கி, சமூக அம்சங்களோடு, social aspect என்ற உணர்வோடு, குறிப் பாக, பழனியில் இருக்கக்கூ டிய வரதமா நதி அணை, பாலாறு பொருந்தலாறு அணை, குதிரையாறு அணை ஆகிய இவையனைத்தும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், முத்தமிழ றிஞர் தலைவர் கலைஞர் அவர்களால், நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்தபோது உருவாக்கப் பட்டு, விவசாயிக ளினு டைய வாழ்வைப் பாதுகாத் ததை அந்தப் பகுதி மக்கள் என்றும் நினைத்துக் கொண் டிருக்கிறார்கள்.

எனவே, அந்த வரலாற் றின் வரிசையில், இந்த அணையும் இடம்பெற வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள் கிறேன். மேட்டுப் பகுதி மக் கள் வறட்சியான நிலங்க ளில் வாழ்ந்து கொண்டி ருக்கிறார்கள். எனவே, இந்த பச்சையாறு அணை திட்டத்தை கனிவோடு பரி சீலித்து, அப்பகுதி மக்களி னுடைய வாழ்வாதாரத் தைக் காத்திட நீங்கள் வழங்கிட வேண்டும்.

அமைச்சர் துரைமுருகன்: பச் சையாறு அணை கட்ட வேண்டுமென்பதில் மாண் புமிகு உறுப்பினர் அவர்க ளுக்கு எவ்வளவு அக்கறை இருக்கிறதோ, எனக்கும் அதிலே உண்டு. காரணம், நான் முதன்முதலாக பொதுப் பணித் துறை அமைச்சரானவுடன், நேரடி யாகச் சென்று பார்த்தது அந்த பச்சையாறு அணை யைக் கட்ட வேண்டுமென் பதற்காகத்தான். ஆனால், 1985ல் ஆய்வு செய்யப் பட்டு, சாத்தியக்கூறுகள் இல்லையென கைவிட்டு விட்டார்கள். மீண்டும், 1999ல் 30 கோடி ரூபாய் ஆகும் என்று மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, ஆய்வு செய்ததில், அணை கட்டப்படுகிற இடத்தில் கடினமான பாறைகள் இல் லையென்று அந்தத் திட்டத் தைக் கைவிட்டு விட்டா ர் கள். 1920ல் 110 கோடி ரூபாய் ஆகும் என்று மீண் டும் ஆய்வு செய்ய சொன் னோம். அந்தத் திட்டத்தைக் கொடுத்தார்கள்.

பச்சையாறு நீர்த்தேக்கம் அமைக்க உத்தேசிக்கப் பட்ட இடத்தில் 600 மீட் டர் மேல்புறத்தில் ஏற்கெ னவே வனத் துறையால்ஆக, 3, 4 முறை ஆய்வு செய்து, சரியாக வரவில்லை என்று விட்டு விட்டார்கள். பிறகு என்ன செய்வது என்று பார்த்தோம். இந்தத் திட் டத்திற்குமேல் 600 மீட்டர் உயரத்தில் வனத் துறை check dam ஒன்று கட்டியிருக்கி றது. அதிலிருந்துதான் நீரை எடுக்க வேண்டியிருக்கிறது. ஆகையினால், மீண்டும், நான் அந்தத் திட்டத்திற்கு இந்த ஆண்டு ஆய்வு செய்ய சொல்கிறேன். பச்சையாறு அணை கட்டுவதில் எனக்கு ஒன்றும் ஆட்சேபனை இல்லை.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

பிரதம மந்திரி நகர்ப்புற வீட்டுவசதி திட்டத்தில்,

தமிழ்நாட்டுக்கு உரிய பங்கீடு அளிக்கப்படுகிறதா?

மக்களவையில் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்வி!

புதுடெல்லி, மார்ச் 30-

திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரக்கோணம், நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்ச கன் 27 மார்ச் 2025 அன்று மக்களவையில், ஒன்றிய அரசின் நிதியில் செயல்ப டுத்தப்படும் பிரதம மந்திரி நகர்ப்புற வசதி திட்டத்தில், தமிழக அரசிற்கு உரிய பங்கு அளிக்கப்படுகிறதா? என்றும், வீடுகள் காலியாக உள்ளதை அரசின் கவனத் தில் உள்ளதா? என்றும், தனி யார் அரசு பங்களிப்பு முறையில் பசுமை வீடுகள் திட்டத்தை செயல்படுத் தும் எண்ணம் அரசிடம் உள்ளதா என்றும் ஒன்றிய அரசின் வீட்டுவசதித் துறை இணையமைச்சர் டோகன் சாகு அவர்களிடம் விரி வான கேள்வியை எழுப்பி னார்.

இதற்கு ஒன்றிய அரசின் வீட்டுவசதித் துறை இணை யமைச்சர் அவர்கள் அளித்த பதில் வருமாறு: -

தமிழ் நாட்டில் பணி புரிந்து வரும் வெளி மாநில தொழிலாளர்களுக்கும், ஏழை மக்களுக்கும் பயன் பெறத் தக்க வகையிலும், பணிபுரியும் இடத்திற்கு அருகிலேயே வீட்டுவசதி பணியாளர்களுக்கு கிடைக் கும் வகையிலும், ஒன்றிய அரசின் பிரதம மந்திரி நகர்ப்புற வீட்டுவசதி திட் டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்றும் அவர்க ளால் நேரு நகர்ப்புற புத் தாக்க திட்டத்தின் கீழ் தனி யார் அரசு பங்களிப்புடன் இத்திட்டம் செயல்படுத் தப்பட்டு வருகிறது என் றும், இதுவரை 5648 வீடு கள்கட்டித்தரப்பட்டுள்ளன என்றும், வீடுகள் காலியாக இல்லை என்றும், நகர்ப்புற வளர்ச்சித் துறையினரால்

ஏழு மாநிலங்களில் 82000க்கும் மேற்பட்ட வீடு கள் நகர்ப்புறங்களில் கட் டப்பட்டுள்ளன என்றும், இவற்றில் 35000க்கும் மேற் பட்ட வீடுகள் தமிழ்நாட் டிற்காக கட்டப்பட்டுள் ளன என்றும் ஒன்றிய அரசின் வீட்டுவசதித் துறை இணையமைச்சர் தெரிவித் தார்.

ஒன்றிய அரசின் அனை வருக்கும் வீடு வழங்கும் திட்டம் கடந்த செப்டம்பர் 2024 முதல் புதுப் பொலிவு டன் செயல்படுத்தப் பட உள்ளது என்றும் இத்திட் டத்தின் கீழ் நான்கு வெவ் வேறு பிரிவு களின் படி ஒரு கோடி ஏழை மக்களுக்கு பயன் கிடைக்கும் என்றும், பொருளாதாரத்தில் நலி வுற்ற பிரிவினருக்கும். குறைந்த வருவாய் உள்ளவர் களுக்கும். வெளிமாநிலத் தில் இருந்து பணிபுரியும் பணியாளர்களுக்கும், இத் திட்டத்தின் மூலம், பசுமை வீடுகள், தனியார் அரசு பங் களிப்புடன் செயல்படுத்த ஒன்றிய அரசு திட்ட மிட் டுள்ளது என்று ஒன்றிய அர சின் வீட்டுவசதித் துறை இணையமைச்சர் டோகன் சாகு, அவர்கள், மக்களவை யில் அரக்கோணம் நாடாளு மன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்ச கன் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதிலை அளித் துள்ளார்.

சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.வின் 112-வது வார்டு சார்பில் கழகத் தலைவரும் திராவிட மாடல் முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் 72-ஆம் ஆண்டு பிறந்த நாளை முன்னிட்டு டிரஸ்ட்புரத்தில் 1072 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி தயாநிதி மாறன் எம்.பி. உரையாற்றினார். இதில் மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.